பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 04 | வெள்ளிக்கிழமை | 21.11.2025 | அதிர்வு 113

**இளங்குமரனின் உரையால்**

## நாடாளுமன்றில் நேற்று கொந்தளித்த அர்ச்சுனா



கமராவுக்கு முன்னால் வீரசனம் பேசுபவர், கமராவுக்குப் பின்னால் தமிழர்களைக் கொன்றொழித்தவர்களுடன்

07



# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

## தமிழர் தேசமெங்கும் உணர்வெழுச்சி நிகழ்வுகள்

**ஈழத் தமிழர்களின் உரிமைக்காகப் போராடி உயிர் நீத்தவீரமறவர்களைநினைவேந்தும் மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகின்றது.**

**இந்த மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது.**

06




நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது ஒரு முக்கியமான விடயத்தை சத்தியலிங்கம் எம்.பி. ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டினார்.

“உங்களின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்குக்கு வருகிறார்கள். அச்சமயங்களில் மக்களின் பிரதிநிதிகளான எங்களை அவர்கள் சந்திப்பதில்லை. தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்களுடன் சேர்ந்து நிகழ்ச்சிகளை நடத்திவிட்டுப் போகிறார்கள். எங்கள் மக்களின் பிரச்சினைகளை நாங்கள் எடுத்துரைப்பதற்கு வாய்ப்பிருப்பதில்லை. அதேசமயம் கொழும்பிலும் அவர்களைச் சந்திப்பதிலும் வேலைகளை செய்விப்பதிலும் நெருக்கடிகள் இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு அமைச்சுக்கும் வடக்கு, கிழக்கு மக்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்கான நேர ஒழுங்குகளைச்

06

# மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது தேசிய மக்கள் சக்தி அரசு

## நாடாளுமன்றத்தில் சாணக்கியன் சாட்டை

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசு அஞ்சுகின்றது என நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் காட்டமாக எடுத்துரைத்தார்.

அவர் அங்கு தமது உரையில் கூறியவை வருமாறு:-

அமைச்சர் மகிந்த ஜயசிங்ஹ அவர்களே, முதலில் ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர் மாகாண சபைகள் குறித்து பேசலாம். இன்று ஆசிரியர்கள் உங்களுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். முதலில் அந்த பிரச்சினைகளைச் சமாளித்து விட்டு, பிறகு ஜனாதிபதி மாகாண சபைகள் குறித்து என்ன கூறினார் என்பதைத் தெரிவியுங்கள். நீங்கள் என்ன கூறினீர்கள்? உங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையில் என்ன உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது?

இன்று மதியம் நாம் அனைவரும் ஜனாதிபதியை சந்தித்து இந்த விடயத்தை அவரிடம் தெரிவித்தோம். எனவே தயவு செய்து அவசரப்பட வேண்டாம் அமைதியாக இருங்கள் என்றார்.

மாகாண சபைத் தேர்தல் எங்கள் மக்களுக்கும் எமது கட்சிக்கும் பெரும் முக்கியத்துவமான ஒன்று. நாட்டின் பிற பகுதிகளில் உள்ள மக்களுக்கு இது எவ்வாறு தோன்றுகிறது, மற்ற கட்சிகள் இதைப் பற்றி எவ்வாறு எண்ணுகின்றன என்பது எமக்குத் தெரியாது. ஆனால் நான் பிரதிநிதித்துவம் செய்கிற கட்சிக்குப் இது மிக மிக முக்கியமான தேர்தல்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களும், ஓர் ஆண்டிற்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என உங்கள் தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்ட வாக்குறுதியை நம்பினர். அந்தப் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இன்று அந்த பொறுப்பு முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதை நான் மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்.

சிறிய குடிசைகளில் வாழும் மக்கள் துன்பப்படுகிறார்கள் அதேவேளை அதிகாரிகள் பொதுமக்களின் துயரத்தைப் புறக்கணிக்கிறார்கள். இது ஏற்றுக்கொள்ள முடியாதது. எதிர்க்கட்சியாக நாங்கள் இக்காரணத்தில் ஒன்றுபட்டுள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் நான் சமர்ப்பித்த தனியார் உறுப்பினர் பிரேரணையை நீங்கள் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வர அஞ்சுகிறீர்கள். அதை முன்வைக்கத் தயங்குகிறீர்கள். உங்களுக்கு உண்மையில் உறுதியும் பொறுப்புணர்ச்சியும் இருந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? இந்த நாடாளுமன்றம் ஆரம்பித்ததிலிருந்து எத்தனை முறை இந்த விவகாரம் முன்வைக்கப்பட்டிருக்கிறது? உங்களுக்கு உண்மையில் தைரியம் இருந்திருந்தால், அன்றே ஒரு குழுவை




நியமித்து, விசாரணையை ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் நீங்கள் வருடக்கணக்கில் தாமதப்படுத்தி அரசியல் விளையாட்டில் ஈடுபட்டீர்கள்.

இது ரணில் விக்கிரமசிங்க அவர்களின் நடைமுறையையே ஒத்திருக்கின்றது. தேர்தலை தாமதப்படுத்தும் நோக்கில் குழுக்களை நியமிப்பது அப்படியானதுதான். நீங்கள் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய ஆதரவாளராகவே நடந்து கொண்டுள்ளீர்கள் என்று தெரிகிறது. வெறும் தேர்தலை தள்ளிப் போடுவதற்காக குழுக்களை அமைக்கிறீர்கள். இதற்கு வெட்கமில்லையா?

மாகாண சபைத் தேர்தல் தாமதமாவதற்கு காரணம் அரசியல் என்றால், அதை நான் புரிந்துகொள்கிறேன். ஆனால் சட்டத்தைப் புறக்கணித்து, நடைமுறைகளை தவறாகப் பயன்படுத்தி, தேவையற்ற குழுக்களை நியமித்து தேர்தலை நடத்தாது தப்பிக்க முயற்சிப்பது - இது மிகவும் கீழ்த்தரமானதும் கண்டிக்கத்தக்கதுமான செயல்.

ஏனெனில் இந்ரத் தேர்தல் அது உங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலேயே வழங்கப்பட்ட வாக்குறுதி. அது உங்கள் கட்சியின் கொள்கை அறிக்கையாகும். அதை நிறைவேற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு.

மாண்புமிகு தலைவர் அவர்களே, பாராளுமன்ற நிலை ஒழுங்கு 52ன் படி, தனியார் உறுப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட எனது தேர்தல் மசோதா தொடர்பாக அமைச்சர் சமர்ப்பித்த அறிக்கையை நான் பெற்றுள்ளேன்.

நான் சமர்ப்பித்த மசோதாவும், அமைச்சர் தனது அறிக்கையில் கூறிய விடயமும் ஒன்றோடொன்று பொருந்தவில்லை.

நான் சமர்ப்பித்த மசோதாவை, முன்னாள் நாடாளுமன்றத்தில் சுமந்திரன் சமர்ப்பித்த அதே மசோதா என்றும், அது தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்த வழிகாட்டல்கள் இதில் சேர்க்கப்படவில்லை என்பதால் இதனை ஏற்க முடியாது என்றும் சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார் என அமைச்சரின் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறானது.

சுமந்திரன் மசோதாகை சமர்ப்பித்த போது, அது நாடாளுமன்றத்தின் தொடர்புடைய குழுவிற்கு அனுப்பப்பட்டது. தனியார் உறுப்பினர் மசோதாக்களுக்கு வழங்கப்படும் நடைமுறைகளின் படி, அந்தக் குழு சில பரிந்துரைகளை வழங்கியது. மேலும், உயர்நீதிமன்ற தீர்ப்பின் படி மசோத திருத்தப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப அந்த மசோதாவில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

அதைத் தொடர்ந்து, நான் இந்த முறை தனியார் உறுப்பினர் மசோதாகை சமர்ப்பிக்கும் போது, உயர்நீதிமன்றம் முன்வைத்த அனைத்து நிபந்தனைகளையும் இணைத்து உள்ளோம்.

ஆனால் அமைச்சர் உண்மையை மறைக்கிறார். இதில் உண்மையாக அவர் ஈடுபடவில்லை. நாடாளுமன்றத்திற்கும் மக்களுக்கும் தவறான தகவலை வழங்குகிறீர்கள்.

தயவு செய்து அமைதியாக இருங்கள் இவை குறித்து உங்களுக்கே தெரிவதில்லை அதற்குரிய விளக்கமும் இல்லை. அதிகாரத்தில் இருக்கும் போது நீதிமன்ற வழக்குகளில் இருந்து சில விரைவான வருமானம் பெறுவது தவிர, இந்த விஷயங்களில் எந்த புரிதலும் உங்களுக்கு இல்லை.

மாகாணசபை தேர்தல்கள் குறித்து நீங்கள் கருத்து சொல்லத் தேவையில்லை. அப்போது நீங்கள் எதிர்த்தீர்கள். இன்றும் அதே நிலைப்படி உள்ளீர்கள். எனவே உயர்நீதிமன்றத்தைக் காரணம் காட்டி எங்களை ஏமாற்ற முயலாதீர்கள். அதை வேறு யாருக்காவது சொல்லலாம். ஆனால் என்னை ஏமாற்ற முயற்சிக்க வேண்டாம்.

நாங்கள் ஜனாதிபதியை மதிக்கிறோம். இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் அவரைச் சந்தித்தோம். மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறும் என்று ஜனாதிபதி தெளிவாக கூறினார். மேலும் இந்தச் சபையிலேயே, தேவையான சட்டத்தை எதிர்க்கட்சியே கொண்டு வர வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல்தலை நடத்துவதற்கு நீங்கள் பயப்படுகின்றீர்கள். வடக்கு மற்றும் கிழக்கில் இன்று அரசாங்கத்தின் செல்வாக்கு இந்தப் புத்தர் சிலை விவகாரத்தில் இல்லாமல் போய்விட்டது.

திருகோணமலைச் சம்பவம் முடிந்த சம்பவம் என்று ஜனாதிபதி நேற்று சொல்கிறார். இந்த முடிந்த சம்பவத்தை பற்றி ஏன் இன்னும் பேச்சுகிறீர்கள் என்று அவர் கேட்கின்றார். அந்தச் சிலை அந்த இடத்திலே இருக்கும் போது இந்தச் சம்பவம் முடிந்த சம்பவமா? அச்சிலையானது காலம் காலமாக இந்தச்அரசின் இனவாதமான செயல்பாட்டினை வரும் சந்ததிக்கும் நினைவூட்டும் முகமாகவே அமையும்.

அந்தச் சிலையைப் பார்க்கும் போதெல்லாம் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் என்ன செய்வார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா சொல்லிவிட்டார்.

இன்னொன்று கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் சம்பந்தமாக பிரச்சனை. அதிலே எமக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் மாறுப்பட்ட கருத்து காணப்படலாம். இருப்பினும் இதனை தீர்க்காது அரசு இதனை வைத்து இரு இனங்களுக்கு இடையில் அரசியல் செய்கின்றது.- என்றார்.





# குற்றவாளிகளுக்கு அரசியல் அடைக்கலம் வழங்காத ஆட்சியை உருவாக்கியுள்ளோம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு தாய்நாடு, தேசம் மற்றும் பிள்ளைகள் பலியாகாமல் தடுப்பது தனது ஒரே நோக்கம் என்றும், எந்தவொரு குற்றவாளிக்கும் அல்லது போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் எவருக்கும் அரசியல் அடைக்கலம் வழங்காத ஓர் அரசாங்கம் இன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசியசெயற்பாட்டின்கீழ்ஏற்பாடுசெய்யப்பட்ட தென் மாகாண நிகழ்ச்சி நேற்று வியாழக்கிழமை பிற்பகல் தங்காலை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் ஈடுபட்ட பாதுகாப்புப் பிரிவு உறுப்பினர்களைகே கௌரவிக்கும் நிகழ்வும் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி ஆற்றிய முழுமையான உரை வருமாறு:–

"போதைப்பொருள்,குற்றச்செயல்கள் என்பவற்றுடன் பிணைந்த கருப்புப் பொருளாதாரம் எமது நாட்டில் எந்த விதத்திலும் அபிவிருத்தி, அமைதி, சுபீட்சம் என்பவற்றை கொண்டுவராது. இந்தப் பேரழிவிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும். இந்தப் பேரழிவு கிராமங்கள்,நகரங்கள், குடும்பக் கட்டமைப்பை எந்தளவு ஆக்கிரமித்துள்ளது என்பதை நாம் அறிவோம்.

குடும்பத்தில் பெரும் எதிர்பார்ப்புடன் வளர்ந்த பிள்ளை இந்தப் போதைப்பொருளுக்கு அடிமையாகி மோசமான நபராக மாறியிருப்பார். எதிர்பார்ப்புடன் வளர்த்த பிள்ளை சமூகத்திற்கு பேரழிவை ஏற்படுத்தும் செயற்பாட்டாளராக மாறியிருப்பார். இதனை எந்தப் பெற்றோரினால் தாங்க முடியும்?

தாம் பாலூட்டி வளர்த்த பிள்ளைக்கு இவ்வாறான நிலைமை ஏற்படுவதை எந்ததாயும்எதிர்பார்க்கமாட்டார். ஆனால் இலட்சக்கணக்கான பிள்ளைகள் இந்த பேரழிவில் சிக்கியுள்ளனர். இது அந்த முழுக் குடும்பத்தையும் வீழ்ச்சியடையச் செய்துள்ளது.

இந்தப் பேரழிவினால் கிராமங்கள் பீதியடைந்துள்ளன. இதனால் பிள்ளைகளை தொழிலுக்கு அனுப்ப,பகுதி நேர வகுப்புக்கு அனுப்ப, விளையாடுவதற்கு அனுப்ப, சுற்றுலா அனுப்புவதற்குக் கூடப் பெற்றோர் பயப்படுகின்றனர். அதனால் தான் இந்தப் பேரழிவைத் தோற்கடிக்க வேண்டும்.

போதைப்பொருளுக்கு அடிமையாகும் பிள்ளை அடுத்து மோசடிகளில் ஈடுபட ஆரம்பிக்கின்றார். திருடராக, மோசடிக்காரராக அவர் மாறுகின்றார். போதைப்பொருள் வலையமைப்புக்கு இறையாகி பணத்துக்காகக் கொலை செய்ய ஆரம்பிக்கின்றார். கைதான 90 வீதத்திற்கும் அதிகமானவர்கள்போதைப்பொருளுக்கு அடிமையானவர்களாக உள்ளனர்.

இது எமது நாட்டின் எதிர்காலத்தை முழுமையாக விழுங்கியுள்ளது. போதைப்பொருள் ஊடாக பெருமளவு பணப்பரிமாற்றம் இடம்பெறுகின்றது. எந்த வர்த்தகத்தின் ஊடாகவும் பல நூறு வருடங்களில் ஈட்ட முடியாத பணத்தை ஒரு படகின் ஊடாக ஈட்டுகின்றனர்.

இந்தப் பணம் பல்வேறு கருப்பு வர்த்தகங்களில் ஈடுபடுத்தப்படுகின்றது. அந்தப் பணத்தால் அரச பொறிமுறையில் உள்ள பலவீனமானவர்களை வாங்க முடிகின்றது. சுற்றிவளைப்புகள் மற்றும் தங்களுக்கு எதிராக அச்சுறுத்தல்களை தடுக்க இவ்வாறு செய்கின்றனர்.

சில பொலிஸ் நிலையங்கள் இதற்கு எதிராகச் செயற்படுவதில்லை எனச் சில கிராமங்களில் குற்றம் சாட்டப்படுகின்றது. நாம் அனைத்து பொலிஸாரையும் அவ்வாறு கூறுவில்லை. சில சமயங்களில் பயமுறுத்தப்பட்டுள்ளனர். போதைப்பொருள் வர்த்தகர்களுக்குச் சிறையில் சிறந்த வசதிகளை அளிக்கா

தொடர்ச்சி▼







# குற்றவாளிகளுக்கு அரசியல் அடைக்கலம் வழங்காத ஆட்சியை உருவாக்கியுள்ளோம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

தொடர்ச்சி▲

விட்டால் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும்குடும்பத்தினர்அச்சுறுத்தப்படுகின்றனர்.

அரச பொறிமுறையை அச்சுறுத்தி தமது பணியை மேற்கொள்ளும் போக்கு ஏற்பட்டுள்ளது. அண்மையில் சில பொலிஸ் அதிகாரிகளுடனான தொலைபேசி உரையாடல்கள் வெளியாகியிருந்தன. அந்த உரையாடல்களின் பிரகாரம் பொலிஸார்தான் பாதாள உலகத் தலைவர்கள் என எண்ணத் தோன்றும்.பொலிஸ்அதிகாரிதான்அச்சுறுத்தப்படுகின்றார். சீருடையின் கௌரவம் இதனால் பாதுகாக்கப்படுகின்றதா?

இளம் குழுக்களை இணைத்து சட்டவிரோத ஆயுதக் குழுக்கள் உருவாகி போதைப்பொருள் வலையமைப்புடன் கைகோர்த்துள்ளன. இது பொருளாதாரத்துக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக இருப்பிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது வரை நீடித்த பழைய பாதையில் கண்டும் காணாமல் செல்வதா?அல்லது எமக்குள்ள பொறுப்பை நிறைவேற்ற நாம் போராடுவதா? இதில் எதனை தெரிவு செய்யப் போகின்றோம்.

தாய்நாட்டின் மீதான பிணைப்புக்கு அமைய நாம் இதனைத் தோற்கடிப்பதற்கான பாதையை தெரிவு செய்து அதனை அழிப்போம்.

இந்தப் பேரழிவை ஒழிப்பது எமது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். அதற்கான ஆரம்ப முன்னெடுப்பாக இந்த வலையமைப்பை உடைக்க வேண்டும். இவர்கள் அரசியல் தலைவர்களின் உதவியுடன் பாதுகாக்கப்பட்டனர். அவர்களுக்கு அதிகாரம் வழங்கினர். அரசியல்வாதிக்குள்ள அதிகாரம் ஜூலம்பிடியே அமரே போன்றவர்களுக்கு வழங்கப்பட்டன.

சில கட்சிகளின் செயற்குழுக்களில் பாதாள உலகத்தினர் அங்கம் வகித்தனர். சில சமயங்களில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இருந்தனர். சில காலங்களில் இளவரசர்களின் பாதுகாப்புக்காக இருந்தனர். எந்தவொரு குற்றவாளிக்கும் அரசியல் பாதுகாப்பு வழங்கப்படாத அரசு இன்று உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள் எமக்களித்துள்ள மக்கள் ஆணையில் அவர்களின் எதிர்பார்ப்பு பொதிந்துள்ளது. அந்த மக்களின் எதிர்பார்ப்புக்கமைய ‘அகன்று செல்’ எனும் பாரிய முன்னெடுப்பை ஆரம்பித்துள்ளோம்.

சிலர் உண்மையான பிரச்சினைகளை ஓரங்கட்டி தாமாக உருவாக்கிய செயற்கையான பிரச்சினைகளைச் சமூகத்திற்குள் கொண்டுவர முயல்கின்றனர். சமூகத்தை திட்டமிட்ட முறையில் ஒரே திசையில் கொண்டு செல்ல முற்படுகையில் குழப்ப நிலையை உருவாக்க வேறு திசைகளுக்கு சமூகத்தின் கவனத்தை திருப்ப முயல்கின்றனர். நாம் அந்தப் பொய்யான குழிகளில் விழ மாட்டோம். சமூகத்தை மீட்கும் இந்தச் செயற்பாட்டை வெற்றி கொள்வோம்.

எமது படையினரும் பொலிஸாரும் பாரிய பங்களிப்பு செய்கின்றனர். உங்கள் சீருடையின் கௌரவம் குற்றவாளிகளின் முன்னிலையில் கரைந்து செல்ல இடமளிக்காதீர்கள். எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும் உங்களை பாதுகாக்க நாம் முன்னிற்போம். பாரதூரமான பணியைச் செய்கிறீர்கள். துணிச்சலுடன் உங்கள் பணியைச் செய்யுங்கள். நடுக்கடலில் போதைப்பொருளுடனான படகு கைப்பற்றப்பட்டது. கடற்படை நாடுபூராவும் கடற்பரப்பை பாதுகாத்து பாரிய பங்காற்றுகின்றது. புலனாய்வுப் பிரிவு அதற்கான தகவல்களை வழங்குகிறது. விமானப் படை, இராணுவம் என்பன அதற்கான பங்களிப்பை வழங்குகின்றது.

இந்தப்பேரழிவைமுடிவுக்குக்கொண்டு வருவதற்கான அரசியல் ரீதியிலான உறுதி மற்றும் அதற்குத் தேவையான அரச பொறிமுறை என்பன இதில் முக்கியமாக முன்னெடுக்கப்படுகிறது என நம்புகின்றோம்.

யாருக்காவது இதனை முன்னெடுக்க விருப்பமில்லாவிட்டால் கையை உயர்த்தி சொல்லுங்கள். உங்களுக்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனை செய்யுங்கள். போதைப் பொருட்களை விற்பவர், அடிமையானவர், கிராமத்தில் திடீரெனப் பணம் சேர்த்தவர் யார் என பொதுமக்களுக்குத் தெரியும். இவர்கள் மக்களுக்கு மறைவானர்கள் அல்லர். மக்கள் அதனை வெளியில் சொல்லப் பயப்படுகின்றனர். சில இடங்களில் மக்கள் இவர்களுக்குப் பயந்து கிராமங்களை விட்டுச் சென்றுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. குற்ற வலையமைப்புக்கு எதிராக மக்கள் எழுச்சி பெற வேண்டும். இந்தப் பேரழிவைத் தோற்கடிக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

போதையற்ற கிராமம், போதையற்ற நகரம், போதையற்ற நாட்டை உருவாக்குவோம். அதற்கு பொதுமக்களின் தலையீடு அவசியம். அடிமையானவர்களை மீட்க வேண்டும். மதத்தலைவர்களுக்கு இதில் முக்கிய பங்கு உள்ளது. மத ஸ்தலங்களுக்கும் கிராமத்துக்கும் இடையிலான பிணைப்பை இதற்காக பயன்படுத்த வேண்டும்.

பல தொண்டர் அமைப்புகள் புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கு தலையிட்டு வருகின்றனர். இதற்காக வரவு – செல

தொடர்ச்சி▼







# குற்றவாளிகளுக்கு அரசியல் அடைக்கலம் வழங்காத ஆட்சியை உருவாக்கியுள்ளோம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

தொடர்ச்சி▲

வுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.சமூகவிரோதநபராகபோதைக்கு அடிமையானவராக யாரும் பிறப்பதில்லை. எமது பிள்ளைகளை இவ்வாறான பேரழிவுகளுக்கு அடிமையாகாத நாட்டை உருவாக்க நாம் தவறியுள்ளோம். அந்த இளைஞர்களை ஏசுவதில் பயனில்லை.

அத்தோடு பலமான புனர்வாழ்வு செயற்பாடு அவசியம் .சகல மாவட்டங்களையும் உள்வாங்கி புனர்வாழ்வு நிலையங்களை அமைக்க இருக்கிறோம். உங்கள் பிள்ளைகளை ஒப்படையுங்கள் அவர்களை கவனித்து மீண்டும் முன்பிருந்த நீங்கள் எதிர்பார்த்த பிள்ளையை உங்களிடம் ஒப்படைப்போம். இது தான் இன்றுள்ள பிரதானமான பணியாகும்.

இந்தப்பணியைநாம்நிறைவுசெய்யாவிட்டால் பொருளாதாரம், சட்டத்தின் ஆட்சி, சிறந்த சமூகம், கல்வி, சுகாதாரம் உறுதிப்படுத்தப்பட்ட நாடு என்பன பயனற்றதாகவிடும். எனவே அரசாங்கம் என்ற வகையில் இந்தப் பேரழிவை இலங்கையில் இருந்து முற்றுமுழுதாக அழித்தொழிப்போம். ஆனால் இது இன்று கூட்டம் நடத்தி நாளை நிறைவு செய்யக் கூடிய செயற்பாடு அல்ல.

4, 5 தசாப்தங்களாக தொடரும் இந்தப் பேரழிவுக்கு சிக்காத நகரங்களை தேட முடியாதுள்ளது. பலியாகாத குடும்பமொன்றை தேட முடியா நிலை ஏற்பட முன்னர் இந்த பேரழிவுக்கு முடிவு கட்ட வேண்டும்.

முன்னர்போதைப்பொருட்கள்விமான நிலையத்தின் ஊடாக சிறிய பொதிகளாக எடுத்து வரப்பட்டன. இன்று கொள்கலன்களில் வருகின்றன. இவ்வாறு இந்தளவுவளர்ச்சிகண்டது?போதைப்பொருட்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதனை ஒழிக்க இடைவிடாது தொடர்ச்சியான செயற்பாடு அவசியம். இதற்கு வெளிநாடுகளின் ஒத்துழைப்பை கோரியுள்ளோம். பலரை வெளிநாடுகளில் பிடித்துள்ளோம். இன்னும் பலர் வெளிநாடுகளில் கைதாகியுள்ளனர். இன்னம் சிலர் மறைந்துள்ளனர். அவர்களைப் பிடிக்க வேண்டும். இங்கு இரண்டாவது அடுக்காக இருக்கும் பிரதான விநியோக வலையமைப்பை ஒழிக்க வேண்டும். முழுமையான சுத்திகரிப்பை செய்வோம்.

இந்த செயற்பாட்டில் இருந்து சமூகத்தை திசைதிருப்ப சிலர் முயலலாம். உலகில் அவ்வாறு நடந்துள்ளது. போதைப்பொருள் வர்த்தகர்களை விடுவிக்க சில நாடுகளில் மக்கள் போராட்டம் கூட நடந்துள்ளது. தமது இருப்புக்காகப் பல்வேறு வகைகளில் தமது பணத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்தச் செயற்பாட்டை முடக்க பல்வேறு கோணங்களில் செயற்படலாம். மக்கள் போராட்டங்கள், அரச விரோத செயற்பாடுகளைத் தூண்ட, இல்லாத பிரச்சினைளை ஏற்படுத்த மறுபக்க முன்னெடுப்புகள் இடம்பெறும்.

இதற்கு எதிராகச் செயற்படும் அதிகாரிகளையும் குடும்பத்தினரையும் அச்சுறுத்தப்படுவது எமக்கு வெளியில் தெரியும். அதேபோல் மறைமுகமாக செயற்படும் குழுக்களும் உள்ளன.

அரசின் நோக்கத்தைத் திசைதிருப்பும் சதி நடக்கின்றது. மக்கள் ஆர்ப்பாட்டத்தைப் பணம் கொடுத்து மேற்கொள்ளலாம். இது குற்றவாளிகளுக்கும் அதற்கு எதிரானவர்களுக்குமான போராட்டம் மாத்திரமல்ல. அதனுடன் பிணைந்த பொறிமுறைகள் உள்ளன. இதற்கு எதிரான நாசகார அரசியலை, அரசியலின் ஊடாக நாம் தோற்கடிப்போம். அதற்கு அரச அதிகாரிகள் தலையிடத் தேவையில்லை. அவர்களை நாம் பயன்படுத்த மாட்டோம். ஜனாதிபதியாக இந்தப் பணியை செய்வேன். கட்சித் தலைவராக நாசகார அரசியலைத் தோற்கடிக்கும் பணியைச் செய்வேன்.

தேசிய செயற்பாட்டைத் தடுக்கும் அரசியல் முன்னெடுப்புக்கு எதிரான அரசியல் செயற்பாட்டை நாம் வேறாக மேற்கொள்வோம்.

போதைப்பொருட்களைப்பயன்படுத்தி ஆட்டம் போடும் குண்டர்களுக்குத் தொழில் ரீதியான படையினர் அடிபணிய முடியுமா? அவர்களுக்கு உயிர் மீதான ஆசை கிடையாது. அவர்களில் ஒரே ஆயுதம் அதுதான். அதில்தான் அவர்கள் எம்மை விட முன்னிலையில் இருக்கிறார்கள்.

அனைவரும் ஒன்றுபட்டால் இதனைத் துடைத்தெறிவோம். எமது செயற்பாடுகளை நாளுக்கு நாள் வேகப்படுத்த வேண்டும். அதற்குத் தேவையான தலைமைத்துவத்தை நாம் வழங்குவோம். பழைய ஆவணங்களை ஓரமாக வையுங்கள்.அது பழைய கதை. கடந்த காலத்தை கொண்டு அன்றி நிகழ்காலத்தை வைத்தே உங்களை அளவிடுவோம்.

அரசியல் அதிகாரம் மாறியுள்ளது. தேசிய பேரழிவில் இருந்து தேசத்தை மீட்பதற்கான செயற்பாட்டை கைவிடாமல் முன்னெடுப்போம். அதற்கான ஒன்றுபட அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.” – என்றார்.

மகாசங்கத்தினர் உள்ளிட்ட மதத் தலைவர்கள், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் பி. ருவன் செனரத், காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் அரவிந்த செனரத், நாடாளுமன்ற உறுப்பினர்களான நிஹால் கலப்பத்தி, சதருவன் மதரசிங்க, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# நுகேகொடைக் கூட்டம் காரணமாக விசேட போக்குவரத்துக் கட்டுப்பாடு

நுகேகொடை ஆனந்த சமரகோன் திறந்தவெளி அரங்கில் இன்று மாலை நடைபெறவுள்ள அரசுக்கு எதிரான கூட்டம் காரணமாக விசேட போக்குவரத்துக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த விசேட போக்குவரத்துக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று பிற்பகல் 2 மணி முதல் பொதுக் கூட்டம் முடிவடையும் வரை நுகேகொடை மேம்பாலத்துக்கு அருகில் உள்ள ஹை லெவல் சந்தியில் இருந்து நாவல சுற்றுவட்டம் வரையான நாவல வீதியில் போக்குவரத்துக் கட்டுப்படுத்தப்படும்.

**மாற்றுப் பாதைகள்:**

கொழும்பு மற்றும் கொஹுவலையில் இருந்து நுகேகொடை வழியாக நாவல அல்லது பிட்ட கோட்டை நோக்கிச் செல்லும் வாகனங்கள், ஹை லெவல் வீதியில் உள்ள கம்சபா சந்தியில் இடதுபுறம் திரும்பி, கட்டிய சந்தி ஊடாக மிரிஹான மற்றும் நாவல பகுதிகளை அடையலாம்.

புறக்கோட்டை மற்றும் நாவல பகுதியில் இருந்து நாவல சுற்றுவட்டம் வழியாக நுகேகொடை நோக்கிச் செல்லும் வாகனங்கள் கட்டிய சந்தியில் இருந்து கம்சபா சந்தி வரையோ, அல்லது தெல்கந்தை சந்தியில் இருந்து ஹை லெவல் வீதி வரையோ பயணிக்கலாம்.

மஹரகமவில் இருந்து ஹை லெவல் வீதி வழியாக நுகேகொடை நோக்கிச் செல்லும் வாகனங்கள், கம்சபா சந்தியில் வலதுபுறம் திரும்பி, கட்டிய சந்தி ஊடாகப் பயணிக்கலாம்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்வதுடன், அவர்கள் வடக்கு, கிழக்கு வரும்போது ஏனைய கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்களை வழிப்படுத்துங்கள்" – என்று ஜனாதிபதியிடம் சத்தியலிங்கம் சுட்டிக்காட்டினார்.

இது நல்ல யோசனை என்று குறிப்பிட்டு, அதைக் குறித்துக் கொண்ட ஜனாதிபதி, அது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பார் என்றும் உறுதி கூறினார் என அறிய வந்தது.

*　*　*

விசாரணை, கைது, வழக்கு, நீதிமன்றம், விளக்க மறியல் என்று பிரச்சினைகள் வந்தால் பிரமுகர்கள் பலரும் சுகவீனம் என்று காரணம் காட்டி வைத்தியசாலைகளில் படுத்து விடுகின்றமை வழமைதான்.

இலங்கையிலும் இந்தியாவிலும் என்று மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும் சட்ட நெருக்கடிகளை எதிர் நோக்கும் பிரமுகர்கள் முதல் தஞ்சமடையும் சரணாலயம் வைத்தியசாலைதான். அல்லது அந்த நெருக்கடிகளினால் ஏற்கனவே இருக்கும் உடற் சுகவீன நெருக்கடிகள் தீவிரமாகி விடுகின்றன.

முன்னைய அரசின் காலங்களில் ஊழல், மோசடி, முறைகேடுகள், நிர்வாகச் சீர்கேடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தற்போதைய அரசு கிடுக்குப்பிடிப் பாணியில் சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற பின்னணியில், அவர்களில் பலரும் இப்படி வைத்தியசாலைகளை நாடும் தந்திரோபாயத்தைக் கைகொள்கின்றார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதாகி விளக்க மறியலுக்கு உத்தரவிடப்பட்டதும் திடீர் உடற்பாதிப்புக்கு இலக்காகி வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டமையும், பின்னர் அதைக் காட்டியே அவருக்குப் பிணை கிட்டியமையும் தெரிந்த விடயங்கள்தான்.

தமக்கு உரித்து இல்லாத ஓர் ஆதனத்தின் சேதாரத்துக்குத் தான் தவறான முறைகளைப் பிரயோகித்து அரசிடமிருந்து பெரும் தொகை இழப்பீடு பெற்றுக் கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஷசீந்தர ராஜபக்ஷ அண்மையில் கைதாகி விளக்க மறியலில் இருந்த சமயத்தில் இந்த சுகவீன சிக்கலே நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டது.

அதேபோல முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் கைதாகி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதும் அவரது சுகவீனமே முக்கிய விவகாரமாக நீதிமன்றம் முன் கொண்டுவரப்பட்டது. அவர் உடனடியாகப் பிணையில் வந்து விட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோசித ராஜபக்ஷவுடன் அவரது பாட்டியார் டெய்சி ஃபொரஸ்ட் அம்மையார் பணச் சலவைக் குற்றச்சாட்டு வழக்கை எதிர்கொள்கிறார். 98 வயதை எட்டியுள்ள டெய்சி ஃபொரஸ்ட் அம்மையார் நினைவிழப்பு நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றமையால் அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்று அவர் சார்பில் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

ராஜபக்ஷ குடும்பத்தில் மற்றொருவருக்கு எதிரான வழக்கு இன்று நீதிமன்றுக்கு வருகின்றது. அதிலும் இந்த சுகவீன விவகாரம்தான் முன்னிறுத்தப்படுகின்றது.

இன்று நுகேகொடையில் அரச எதிர்ப்புப் போராட்டத்தை பெருமெடுப்பில் முன்னெடுக்கின்றது சிறிலங்கா பொதுஜன பெரமுன (மொட்டுக் கட்சி). அதன் ஸ்தாபகரமான முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு இன்று மாத்தறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வருகின்றது.

முறையற்ற வகையில் சட்டவிரோதமாக ஐந்து கோடி ரூபா பணத்தை சுவீகரித்து அதன் மூலம் காணிக் கொள்வனவு செய்த விவகாரம் தொடர்பாகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு போன தவணைக்கு எடுக்கப்பட்ட போது, அமெரிக்காவில் இருக்கும் பஸில் ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் அவர் கதிரையில் இருந்து எழும்போது இடறி விழுந்தமையால் அவருக்கு முள்நாண் தொடர்பான நரம்பு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்றும், ஆதலால் அவர் அமெரிக்காவில் இருந்து பயணம் செய்யக் கூடிய நிலையில் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தனர். அந்த வாதத்தின் அடிப்படையில் வழக்கு இன்றைய திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பாத காரணத்தினால் இன்றும் அவர் வழக்கிற்கு முன்னிலையாக மாட்டார் எனக் கூறப்படுகிறது.

முதுகு எலும்புடன் தொடர்புபட்ட நரம்பு நோய்ப் பாதிப்புக்கு உட்பட்டிருக்கின்றார் என்று கூறப்படும் பஸில் ராஜபக்ஷ அந்த நோய்ப் பாதிப்பை வைத்து வழக்கை சில காலம் இழுத்தடிக்க முயற்சிக்கக் கூடும்.

தங்கள் அதிகார காலத்தில் மக்களை உபாதைக்குள் தள்ளியவர்கள், இப்போது நீதிமன்றங்களின் உபாதையைச் சமாளிப்பதற்கு நோய் உபாதையைக் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

## மாவீரர் வாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளியான லெப். சங்கர் முதல் வித்தாக வீரமரணமடைந்தார். அந்த நாளையே மாவீரர் நாளாக 1989 ஆம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் அறிவிக்கப்பட்டது.

அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இந்த நாளில் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

மாவீரர் நாளை நினைவுகூரும் வகையில், நவம்பர் 21 ஆம் நாள் மாவீரர் வாரம் ஆரம்பமாகும். இந்த நாட்களில் தமிழ் மக்களால் வணக்க நிகழ்வுகள் மேற்கொள்ளப்படும்.

இறுதி மாவீரர் நிகழ்வுகள் நவம்பர் 27ஆம் திகதி நடைபெறும். அந்நாளில் தமிழ் மண்ணுக்காய் மரணித்த மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தி ஈகைச்சுடர் ஏற்றுவார்கள்.

பொதுவாக, தமிழர் தாயகத்தில் மாவீரர் வாரம் முழுவதும் மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகள் பறக்கவிட்டு, மாவீரர்களுக்கான பாடல்கள் ஒலிக்கவிட்டு துயிலும் இல்லங்களில் வணக்க நிகழ்வுகள் நடத்தப்படுவது வழக்கம். அதேபோல், புலம்பெயர் தேசங்களிலும் இவ்வகையான வணக்க நிகழ்வுகள் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டுச் சேர்ந்து செயற்படுகின்றனர் என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.இளங்குமரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"நாம் மக்களுக்கான அரசியல் செய்கின்றோம். சிலர் ஊடகங்களுக்காக அரசியல் செய்கின்றனர். அந்த நபருக்கு ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற தமிழ்க் கலாசாரத்தைக்கூட பின்பற்றத் தெரியாதுள்ளது."– என்றும் இளங்குமரன் எம்.பி. குறிப்பிட்டார்.

இளங்குமரன் எம்.பி. தனது உரையின்போது சிலர் தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தாலும் அவர் எவரினதும் பெயரைக் குறிப்பிட்டு விமர்சிக்கவில்லை.

எனினும், இளங்குமரனின் உரையை அடுத்து அர்ச்சுனா எம்.பி. ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

"நான் தமிழன், சிங்கள மக்களைக் காதலிக்கின்றேன். விடயதானத்துக்குப் பொருத்தமில்லாத விடயங்களை இளங்குமரன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்." என்று அர்ச்சுனா கொந்தளித்தார்.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் மற்றும் சிற்றுண்டிச்சாலை, வாகனப்பாதுகாப்பு நிலையங்கள், வாகனத் தரிப்பிடக் குத்தகை, நடமாடும் கடைகள், தள்ளுவண்டில்கள், விளம்பர ஒலிபரப்புச் சேவைகள் என்பவற்றுக்கான கேள்வி அறிவித்தல் – 2026

## (01.01.2026 – 31.12.2026)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - | ரூபா **1,180.00** (வற் வரியுடன்) |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - | 21.11 .2025      08.12.2025<br>(மு.ப **9.00** - பி.ப.**2.30** மணி வரை) |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - | 09.12.2025 மு.ப 10.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - | 09.12.2025 .மு.ப 10.00 மணிக்கு |

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **09.12.2025** ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கவேண்டும்.
3. சந்தை சுத்திகரிப்பு பணிகளை குத்தகையாளர் தாமே பணியாளர்களை வேலைக்கமர்த்தி மேற்கொள்ள வேண்டும். ஒன்று சேர்க்கப்பட்ட தரம் பிரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளையும், திரவக்கழிவுகளையும் அகற்றும் பணி மாநகர சபையால் மேற்கொள்ளப்படும். இதற்கான கட்டணம் குத் தகையாளரால் செலுத்தப்பட வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
7. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் இணைக் கப்பட்டுள்ளது. அதனை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப் பலகையில் பார்வையிடமுடியும்
8. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் **1/3** வைப்புப்பணத்தை 15.12.2025 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

## மீள்கேள்வி அறிவித்தல் - 2026 (01.01.2026 - 31.12.2026)

| இல | விபரம் | கடை இல | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை மீன்சந்தை | | 10,000.00 | 11,500,000.00 |
| 2 | குருநகர் மீன்சந்தை | | 10,000.00 | 10,132,022.00 |
| 3 | பெரியகடை மரக்கறிச்சந்தை | | 10000.00 | 2,300,000.00 |
| 4 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 120,101.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,255,500.00 |
| 6 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 58,100.00 |
| 7 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 1,801,000.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 2,740,000.00 |
| 9 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 1,021,511.00 |
| 10 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 1,200,000.00 |
| 11 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 1,285,000.00 |
| 12 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 13 | செங்குந்த கருவாட்டுக்டை | இல.01 | 5,000.00 | 141,000.00 |
| 14 | செங்குந்த கோழிஇறைசிக்கடை | இல 04 | 5,000.00 | 663,500.00 |
| 15 | செங்குந்த ஆட்டிறைச்சிக்கடை | இல05 | 5,000.00 | 1,075,000.00 |
| 16 | செங்குந்த ஆட்டிறைச்சிக்கடை | இல06 | 5,000.00 | 1,001,150.00 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 626,234.98 |
| 18 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 71,100.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 411,500.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 22 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 24 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.00 |
| 25 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 26 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 27 | நாவாந்துறை கோழி இறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 630,000.00 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,401.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 441,000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,111.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 712,210.00 |

## கேள்வி அறிவித்தல் (01.01.2026 - 31.12.2026)

| இல | விபரம் | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1 | துரையப்பா விளையாட்டரங்கு சிற்றுண்டிச்சாலை, துரையப்பா வியைாட்டு அரங்கு நடமாடும் கடை இல 01, சுப்பிரமணியம் பூங்கா- நடமாடும்கடை இல 01, இல 02 | 61,000.00 | 655,000.00 |
| 2 | வாகனத்தரிபிடக் குத்தகை | 40,000.00 | 4,379,460.00 |
| 3 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாக உள்ள வாகனப் பாதுகாப்பு நிலையமும் நல்லூர் மலசலகூடசுத்திகரிப்பு பணியும் | 5,000.00 | 476,000.00 |
| 4 | நீதிமன்ற துவிச்சகசக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 550,000.00 |
| 5 | நவீன சந்தை விளம்பர ஒலிபரப்பு சேவை | 25,000.00 | 2,597,647.06 |
| 6 | செங்குந்த விளம்பர ஒலிபரப்பு சேவை | 7,000.00 | 500,047.07 |
| 7 | நடமாடும் கடை முத்திரச்சந்தை இல 01 | 20,000.00 | 481,000.00 |
| 8 | நடமாடும் கடை முத்திரச்சந்தை இல 02 | 20,000.00 | 418,999.00 |
| 9 | நடமாடும் கடை நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 01 | 20,000.00 | 212,500.00 |
| 10 | நடமாடும் கடை நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 02 | 20,000.00 | 207,000.00 |
| 11 | நடமாடும் கடை இல 01 - பண்ணை மீன்சந்தை | 20,000.00 | 216,000.00 |
| 12 | நடமாடும் கடை இல 02 - பண்ணை மீன்சந்தை | 20,000.00 | 211,200.00 |
| 13 | நடமாடும் கடை நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 03 | 20,000.00 | 180,000.00 |
| | **நடமாடும் வியாபாரம் .- நிபந்தனை.**<br>1. நடமாடும் வியாபார விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து மாசநகரசபையில் அனுமதி பெறப்பட வேண்டும்.<br>2. பொதுப்போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் சபையின் எல்லைக்குள் வியாபாரம் செய்யவேண்டும். | | |
| 14 | தள்ளுவண்டில் இல 01 | 20,000.00 | 120,000.00 |
| 15 | தள்ளுவண்டில் இல 02 | 20,000.00 | 120,000.00 |
| 16 | தள்ளுவண்டில் இல 03 | 20,000.00 | 120,000.00 |
| 17 | தள்ளுவண்டில் இல 04 | 20,000.00 | 120,000.00 |
| 18 | தள்ளுவண்டில் இல 05 | 20,000.00 | 120,000.00 |
| 19 | தள்ளுவண்டில் இல 06 | 20,000.00 | 120,000.00 |
| 20 | தள்ளுவண்டில் இல 07 | 20,000.00 | 120,000.00 |
| 21 | பெரியகடைமரக்கறிச்சந்தை வாழைப்பழக்கடைக்கு வடகிழக்கு மூலையாகவும் சந்தையின் வைரவர் கோவிலின் வடமேற்கு மூலையாகவும் உள்ள துவிச்சக்கரவண்டி மோட்டார் சைக்கில் பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 250,000.00 |

முதல்வர்
யாழ். மாநகர சபை,
யாழ்ப்பாணம்

# ஓட்டோ - லொறி நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளம் பெண் ஒருவர் மரணம்!

ஓட்டோவும் லொறியும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கேகாலையில் மாவனெல்ல – ஹெம்மாத்தகம வீதியில் 9 ஆவது கிலோ மீற்றர் மைல்கல்லுக்கு அருகில் நேற்று இடம்பெற்றுள்ளது.

ஹெம்மாத்தகம நோக்கிச் சென்ற ஓட்டோ, எதிர்த் திசையில் வந்த லொறியுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது, பலத்த காயமடைந்த ஓட்டோவின் சாரதி மற்றும் இரண்டு பெண் பயணிகள் மாவனெல்ல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது, சிகிச்சை பலனின்றி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஹெம்மாத்தகம பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் மாவனெல்ல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.



லொறியின் சாரதியைக் கைது செய்துள்ள ஹெம்மாத்தகம பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்: ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைது!



கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு மற்றும் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலுமொரு சந்தேகநபர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 7ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலொங்கொட – ஹசலக்க பகுதியில் வீடொன்றில் மறைந்திருந்தபோது மேற்படி நபர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 12 கிராம் 300 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கடுவலை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் 72 மணிநேர தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அதிகரிக்கும் குற்றம்

ஒரு காலத்தில் - 2009ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் - குறிப்பாக யாழ்பாணம் தமிழ்ப் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயத்தில் - இங்கு தமிழர் தாயகத்தில் போதைப் பொருள் பாவனை பற்றிய பிரச்சினையோ, கவலையோ, நெருக்கடியோ இருக்கவில்லை.

மது, புகைத்தல் போன்ற விடயங்களின் பாதிப்பும் கணிசமான கட்டுப்பாட்டில் இருந்தது.

ஆனால் இன்று நிலைமை தலைகீழ். இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்குச் சற்றும் குறைவில்லாத அளவில் போதைப் பொருள் பிரச்சினை தமிழர் தாயகத்தை ஆட்கொண்டுள்ளது. போதைப்பொருள் வர்த்தகத்திற்கான மைய நிலமாக - கடத்தல் பிரதேசமாக - வடக்கு இலங்கை மாறி வருவதும் அவதானிக்கப் படுகின்றது.

அதுபோன்ற மற்றோர் குற்றப் பிரச்சினையைத் தமிழர் தாயகம் தற்போது எதிர்கொள்ளும் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

சட்டம் - ஒழுங்கு நிலைவரத்தைச் சரிவரப் பராமரிக்கக் கூடிய சூழ்நிலைகள் இல்லாத தமிழர் தாயகத்தில், சமூக ஊடகங்கள் ஊடான - இணையதளம் மூலமான - குற்றங்கள் கண்மண் தெரியாமல் அதிகரித்து வருகின்றன என இப்போது தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இந்தப் பிரச்சினை தமிழர் தாயகத்தில் பெரும் சமூகச் சீரழிவாக மேலெழக் கூடிய நெருக்கடி நிலைகள் இப்போதே தென்படுகின்றன.

நாட்டில் சைபர் குற்றச் சம்பவங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன. தினமும் சுமார் 25 சைபர் கிரைம் முறைப்பாடுகள் பதிவாகின்றன. அவற்றில் பெரும்பாலான சம்பவங்கள் வடக்கு மாகாணத்தில் இருந்தே பதிவாகியுள்ளன என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வழங்கப்பட்ட தரவுகள், வடக்கு மாகாணத்தில் கூர்மையான சைபர் குற்றச் சம்பவங்களின் அதிகரிப்பைக் காட்டுகின்றன. 2020 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் 24 சைபர் குற்ற சம்பவங்களே பதிவாகியுள்ளன. அதைத் தொடர்ந்து 2021 இல் அது 577 ஆக உயர்ந்தது. 2022 இல் 654 ஆகவும், 2023 இல் 472 ஆகவும், 2024 இல் 1,539 ஆகவும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டுள்ளார். இந்த ஆண்டில் 2025 ஒக்டோபர் 31 வரை 2,368 புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

போதைப் பொருள் குற்றங்கள், வர்த்தகங்கள், பாவனை போன்றவற்றுக்கு எதிராகப் பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றமை போல இந்த சைபர் குற்றங்களையும் கட்டுப்படுத்த ஒரு பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் முன்னெடுக்கப்பட வேண்டிய நெருக்கடி வரலாம். அமைச்சர் வெளியிடும் புள்ளி விவரங்கள் அதனைத்தான் காட்டுகின்றன.

# ஹயஸ் வாகனம் மோதி ஓட்டோ சாரதி மரணம்!



ஓட்டோவும் ஹயஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஓட்டோ உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை – பொல்பிட்டிய யடிபேலிய பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து வட்டகொட நோக்கிச்சென்றஓட்டோவும், ஹட்டனில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ஹயஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி கிதுல்கல தலிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பொரளையைச் சேர்ந்த 53 வயதான நபரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஓட்டோவின் பின்புற இருக்கையில் இருந்த ஒரு பெண்ணும் காயமடைந்த நிலையில் தலிகம பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதிகவேகத்தில்சென்றஓட்டோவேகக் கட்டுப்பாட்டை இழந்ததே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்தில் ஓட்டோவும் ஹயஸ் வாகனமும் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

ஹயஸ் வாகனத்தின் சாரதி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்பிட்டிய போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் புதிதாக காற்றாலை அமைக்கும் விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் பொறுப்பு கூறவேண்டும்

## சாணக்கியன் எம்.பி, சபையில் தெரிவிப்பு



“மன்னார் மாவட்டத்தில் புதிதாக காற்றாலைகளுக்கு இடமளிக்கப்படாது என்று ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் மன்னார்மக்களின்விருப்பத்திற்குமாறாக அந்த பிரதேசத்தில் 14 காற்றாலைகளை நிர்மாணிக்க வேண்டும் என்று ஜனாதிபதி தற்போது குறிப்பிடுகிறார். இது தொடர்பில் வடக்கு மாகாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

“அரசாங்கம் கவிழ்வதற்கு காரணமான அமைச்சே அமைச்சர் குமார ஜயக்கொடியிடம் இருக்கின்றது. 2022 மற்றும் 2023 காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடியின்போது அதிகளவில் பாதிக்கப்பட்ட அமைச்சே இது. இந்த அமைச்சின் வேலைத்திட்டங்கள் காரணமாகவே நாட்டில் போராட்டங்களும் தோற்றம் பெற்றன. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு பிரதான காரணமாகவும் இந்த அமைச்சே இருந்தது. இதனால் ஆட்சிக்கு வர முன்னர் இந்த அமைச்சு தொடர்பில் செய்ய முடியாத பல்வேறு வாக்குறுதிகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருளுக்கான வரியே அதன் விலைஅதிகரிப்புக்குகாரணமாகஅமைந்தது. அவ்வாறான நேரத்தில் நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நம்பி மக்கள் வாக்களித்தனர். அதனை செய்ய முடியாது போயுள்ளது. ஆனால் அதனை செய்யக்கூடிய வகையிலான முறைமைகள் உள்ளன.

இலங்கையை போன்ற பொருளாதாரத்தை கொண்ட நாடுகளை பார்க்கும் போது அந்த நாடுகள் வலுச்சக்தியை எவ்வாறு முகாமைத்துவம் செய்கின்றது என்று ஆராய்ந்தால் இலங்கைக்கு சிறந்த பாடத்தை கற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக நேபாளம் மற்றும் பூட்டான் போன்ற நாடுகளில் வலுச்சக்தி பாதுகாப்பு மிகவும் முன்னணியில் இருக்கின்றது.

அங்குவலுசக்திபாதுகாப்புமுகாமைத்துவத்திற்கு நிலத்தொடர்பு உள்ள நாடுகள் இந்தியாவுடன் எரிசக்தி தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள மற்றைய நாடுகளுக்கு இடையில் அந்த இணைப்புகளை கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன. இதுபோன்று இலங்கை எதிர்காலத்தில் வலுச் சக்தி நெருக்கடிகள் ஏற்படாத வகையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்க வேண்டும்.

இந்தியாவுடன் எரிபொருள் தொடர்புகளை ஏற்படுத்தி, குழாய் வழியில் அதனை இலங்கைக்கு கொண்டு வந்தால் எமக்கு இலங்கையில் எரிபொருள் விலைகளையும் குறைக்க முடியும். திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்து தேவையானவற்றை சேமித்து வைத்துக்கொள்ள முடியும்.

அதன்மூலம் எதிர்காலத்தில் எரிபொருள் தொடர்பில் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படாது. நாங்கள் இந்தியாவை பார்த்து பயப்படத் தேவையில்லை. இந்திய மக்கள்தான் எங்களை பார்த்து பயப்பட வேண்டும். இலங்கையில் இருப்பிடம் இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடையது. இதனால் நாம் பயப்பட வேண்டியதில்லை.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கில் தேர்தல் காலத்தில் ஜனாதிபதியினால் சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அதில் மன்னார் காற்றாலைகள் தொடர்பில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டது. அங்கு புதிதாக காற்றாலைகளுக்கு இடமளிக்கப்படாது என்று கூறப்பட்டது. ஆனால் அங்குள்ள மக்களின் விருப்பத்திற்கு மாறாக அந்த பிரதேசத்தில் 14 காற்றாலைகளைநாங்கள்செய்தேஆகவேண்டும் என்று தற்போது ஜனாதிபதி கூறியுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புக் கூற வேண்டும். இந்த காற்றாலைகளுக்கு மக்கள் இணக்கப்பாடுகளை தெரிவித்துள்ளதாக குறிப்பிடுவது என்பது தவறானது.

இது தொடர்பில் மக்கள் மத்தியில் ஆதங்கம் இருக்கின்றது. அமைச்சரின் வீட்டுக்கு அருகில் காற்றாலையை அமைத்து அதன் சத்தம் உங்கள் காதுகளுக்கு வரும் போதே உங்களுக்கு அந்த பாதிப்பு தெரியும். இது போன்று இன்னும் பல சிக்கல்கள் இருக்கின்றன. 14 காற்றாலைகளையும் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நிறைவேற்று ஜனாதிபதியென நீங்கள் அந்த காற்றாலைகளை அமைத்தாலும் அதனையும் தாண்டி எதனையும் செய்யக்கூடாது என்றும் கோருகின்றேன்.”– என்றார்.

# தேர்தலை இழுத்தடிப்பதற்கே எல்லை நிர்ணயக் கதைகள்!

## எதிரணி எம்.பி. அலவத்துவல குற்றச்சாட்டு

“மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிக்கவே எல்லை நிர்ணயம் தொடர்பில் பேசப்படுகின்றது. அவ்வாறு செய்யாமல் மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையில் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

– இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ.அலவத்துவல மேலும் குறிப்பிட்டதாவது:-



“மாகாண சபைகளில் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லை. ஆளுநர்கள் ஊடாகவே அவை நிர்வகிக்கப்படுகின்றன. மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது தவறு என்பதை நாம் ஏற்கின்றோம். அன்று தவறு நடந்துள்ளது. எனினும், அது சரிசெய்யப்பட வேண்டும்.

பழைய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம். இதற்காகச் சாணக்கியன் எம்.பி. முன்வைத்துள்ள தனிநபர் சட்டமூலத்தை அரசு தமது சட்டமூலமாக கொண்டு வந்து இதற்குரிய நடவடிக்கையை எடுக்கலாம். அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம்.” – என்றார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் 8 பேர் யாழ்.நகரப் பகுதிகளில் சிக்கினர்



யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் நீண்ட காலமாக ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த இருவர் உட்பட 8 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இந்தக் கைதுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 8 பேரில் இருவர் நீண்டகாலமாக ஐஸ் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக அவர்கள், யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வாடகைக்கு அறைகளையும் பெற்று தங்கியிருந்துள்ளனர் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்கள் இருவரிடம் இருந்தும் முறையே 6 கிராம் மற்றும் 2 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

ஏனைய 6 பேரிடம் இருந்தும் சிறிதளவுஐஸ்போதைப்பொருள்கள்மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# திரிபோசாவுக்கு பற்றாக்குறை

நாடு முழுவதும் உள்ள பல மகப்பேறு மற்றும் சிறுவர் மருத்துவமனைகளில் திரிபோசாவுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் மருத்துவ தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் இந்தத் தட்டுப்பாடு காரணமாக, திரிபோசா குறிப்பிட்ட சில பிரிவினருக்கே வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, மூன்று வயதுக்கு மேற்பட்ட கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள், இரத்த சோகை உள்ள தாய்மார்கள், சுகாதாரமற்ற எடை கொண்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு திரிபோசா வழங்கப்படுகிறது.

கடந்த பல வருடங்களாக 3 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு திரிபோசா வழங்கப்படவில்லை என்றும் இந்தத் திட்டம்




மீண்டும் தொடங்கப்படும் என அதிகாரிகள் அறிவித்த போதிலும், இதுவரை அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டதாகவும் மருத்துவர் சஞ்சீவ வருத்தம் தெரிவித்துள்ளார்.



# தெற்கு கடலில் போதைப்பொருள் கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் படகுடன் 6 சந்தேகநபர்கள் கைது

நாட்டின் தெற்கு ஆழ்கடலினூடாக போதைப்பொருள் கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நீண்ட நாள் மீன் படகுடன் 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி படகு கரைக்கு கொண்டுவரப்படுவதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கமாண்டர் புத்திக சம்பத் தெரிவித்துள்ளார். இந்த மீன்பிடிப் படகில் போதைப் பொருள் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு வரலாற்றில் அதிகூடிய வரி வருமானம்




உள்நாட்டு இறைவரி திணைக்களம் வரலாற்றில் அதிகூடிய வரி வருமானத்தை ஈட்டியுள்ளது.

2025 ஆம் ஆண்டில் கடந்த 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஈட்டப்பட்ட வரி வருமானம் 2002 பில்லியன் ரூபாவாகும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கடந்த வருடத்தின் மொத்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் 60.079 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும்.

# 22 நிறுவனங்கள் தொடர்பான மத்திய வங்கியின் அறிவித்தல்

தடை செய்யப்பட்ட பிரமிட் யோசனை திட்டத்தின் கீழ் செயற்பட்ட 22 நிறுவனங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி அறிவித்தல் விடுத்துள்ளது.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி முன்னெடுத்த விசாரணைகளுக்கு பின்னர் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

'SGO அல்லது sgomine.com' என்ற நிறுவனம் தடை செய்யப்பட்ட திட்டமொன்றில் ஈடுபட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன் இதற்கு முன்னர் மேலும் 21 நிறுவனங்கள் தடை செய்யப்பட்ட நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.





# வெளிநாட்டவர்கள் ஆட்டோ செலுத்துவதற்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதில்லை

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவிப்பு

நாட்டில் வெளிநாட்டவர்கள் முச்சக்கர வண்டிகளை செலுத்துவதற்குச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதில்லை என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டுப் பிரஜைகளுக்கான தற்காலிக முச்சக்கரவண்டி சாரதி அனுமதிப்பத்திரங்களை அறிமுகப்படுத்த எந்தத் திட்டமும் இல்லை என்றும் அந்த திணைக்களம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இருப்பினும், International Driving Perஅவை வைத்திருக்கும் வெளிநாட்டினர் இலங்கையில் சட்டப்பூர்வமாக வாகனத்தைச் செலுத்தலாம் என பொலிஸ் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், தமது சொந்த நாட்டில் பெற்ற உள்நாட்டுச் சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவர்களும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடமிருந்து சான்றிதழ் அல்லது அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால், இங்கு வாகனங்களைச் செலுத்தலாம் என்றும் பொலிஸ் தெரிவித்துள்ளது.

# வாந்தி எடுத்த நிலையில் 9 மாத குழந்தை மரணம்

வாந்தி எடுத்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட 9 மாத ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை உயரப்புலம் இளவாலையைச் சேர்ந்த தர்ஷன் அஸ்வின் என்ற குழந்தையாகும்.

மேற்படி குழந்தை நேற்று வியாழக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் வாந்தி எடுத்த நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது குழந்தை உயிரிழந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரதே பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை இளவாலைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

மேற்படி ஆண் குழந்தையுடன் இரட்டைக் குழந்தையாக பிறந்த பெண் குழந்தை ஒன்று கடந்த நான்காம் மாதம் முதலாம் திகதி உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# கை கழுவச் சென்ற ஆண் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து மரணம்



யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் கிணற்றடியில் கை கழுவச் சென்ற ஆண் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்த உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே இடத்தைச் சின்னத்துரை ராஜ்வதனன் (வயது 40) என்பவராவார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை கிணற்றில் தவறி விழுந்து அவர் உயிரிழந்தார்.

சம்பவ இடத்திற்கு சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.









# மாவீரர் வாரத்தை முன்னிட்டு சுப்பர்மடத்தில் ஏற்பாடுகள்

மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாக உள்ள நிலையில், பருத்தித்துறை, சுப்பர் மடத்தில் அதற்கான ஏற்பாடுகளை ஊர் மக்கள் இணைந்து நேற்று முன்னெடுத்தனர்.

அத்துடன், இரத்ததான நிகழ்வும் இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்க பொது மண்டபத்தில் இடம்பெறும் இரத்ததான நிகழ்வில் பங்கேற்று குருதிக் கொடை வழங்குமாறு தன்னார்வ குருதிக்கொடையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.






# ஆளும் கட்சி எம்.பிக்களின் கொடும்பாவிகளை எரித்து முத்துநகர் விவசாயிகள் விவசாய நிலத்தில் போராட்டம்










திருகோணமலை முத்துநகர் – தஹரவட்டுவான் விவசாய நிலப் பகுதியில் விவசாயிகள் நேற்றுக் கடும் மழையையும் பாராது கொடும்பாவி எரித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மாவட்டம் முத்துநகர் கிராமத்தைச் சேர்ந்த 351 விவசாயக் குடும்பங்கள், தங்கள் பாரம்பரியமாகப் பயன்படுத்தி வந்த விவசாய நிலங்களை இழந்தமையால் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றன.

சூரிய மின் சக்தி உற்பத்திக்காக முத்து நகர் விவசாய நிலத்தைக் கைப்பற்றி, அப்பகுதிக் குளத்தையும் மூடியதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இம்முறை பயிர் பருவத்திற்கான நெற்செய்கையும் நில இழப்பினால் பெரிதும் தாமதமாகியுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கத்திடம் தீர்வு கோரி பல முறை போராட்டங்கள் நடத்தப்பட்டாலும் இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு பிரதமர் விவசாயிகளை சந்தித்து தீர்வு வழங்குவார் என் உறுதியளித்திருந்தாலும், அதுவும் மேலும் காலதாமதமாக மாறியுள்ளதாக காணப்படுகிறது.

பிரதமர் அலுவலகத்துடன் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது, மாவட்டத்தின் ஆளுங் கட்சியின் சில பிரதிநிதிகள் மற்றும் சில பிரதேச அதிகாரிகள் இந்த நிலப் பிரச்சினை தொடர்பாக தவறான தகவல்களை பரப்பியிருப்பது வெளிச்சத்துக்கு வந்ததாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் கூறிய தவறான தகவல்களில் –

முத்துநகர் பகுதியில் முன்பாகவே குளம் இருந்ததில்லை, இருந்த குளங்கள் மூடப்படவில்லை மற்றும் இப்பகுதியில் சரியான விவசாய நிலங்கள் இல்லை என்ற குற்றச்சாட்டுகள் அடங்குகின்றன.

மேலும், தஹரவட்டுவான் குளத்தையும் எதிர்வரும் நாள்களில் அழிக்கும் திட்டங்கள் இருக்கின்றன எனவும் விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இந்தநிலையில், இந்த விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றைய மழையைக் கூடப் பொருட்படுத்தாமல் தஹரவட்டுவான் குளப் பகுதியில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது தேசிய மக்கள் சக்தியின் ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரினதும் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன.

விவசாயிகள் ஆரம்பித்த சத்தியாகிரகப் போராட்டமும் தொடராக நேறும் 65 ஆவது நாளாளாகத் தொடர்கிறது என அவர்கள் தெரிவித்தனர்.



# குளவிகளின் தாக்குதலில் இருந்து மகனைக் காத்த தந்தை மரணம்!

குளவிக் கொட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம், மிஹிந்தலை, இலுப்பு கன்னிய பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி நபரின் 11 வயது மகன் வீட்டுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

சிறுதி நேரத்தில் மகன் அலறும் சத்தம் கேட்டதால், தந்தை வீட்டுக்கு வெளியில் சென்று பார்த்துள்ளார்.

இதன்போது மகனைச் சுற்றிக் குளவிக் கூட்டம் இருந்துள்ள நிலையில், மகனைக் காப்பாற்றுவதற்காகத் தந்தை தனது சட்டையைக் கழற்றி மகனைச் சுற்றிக் கட்டியுள்ளார்.

ஆனால், தந்தை குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அத்துடன் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 11 வயதுடைய மகன் மேலதிகசிகிச்சைக்காகஅனுராதபுரம்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வீட்டில் மகனும் தந்தையும் மட்டுமே வசித்து வந்துள்ளனர் எனவும், தாயார் வெளிநாட்டில் வேலை செய்து வருகின்றார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ரிவால்வர் ரக துப்பாக்கியுடன் குடும்பஸ்தர் ஒருவர் சிக்கினார்!

## அவரிடமிருந்து போதைப்பொருளும் மீட்பு



நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாபம் வீதியில், ரிவால்வர் ரக துப்பாக்கி மற்றும் போதைப் பொருட்களுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் ஜெயவர்தனபுர முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்று இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவால்வர் ரக துப்பாக்கி, 7 கிலோகிராம் 974 கிராம் ஹஷிஷ் போதைப்பொருள் மற்றும் 1 கிலோகிராம் 580 கிராம் கஞ்சா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், சந்தேகநபர் கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய குடும்பஸ்தர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கொச்சிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனிமையில் வசித்த பெண் சடலமாக மீட்கப்பட்டார்

பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வசித்து வந்த பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்க்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த கனகசுந்தரம் நந்தினி (வயது 62) என்பவராவார்.

தனிமையில் வசித்த வந்தவரை இரண்டு நாளாக காணாத நிலையில் தேடிய போது சடலமாக காணப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்கு நேற்று வியாழக்கிழமை சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.







# பிஹார் முதல்வரானார் நிதிஷ் குமார்: 26 அமைச்சர்களும் பதவியேற்றனர்

பிரதமர் நரேந்திர மோடி, அமித் ஷா மற்றும் என்.டி.ஏ. கூட்டணி தலைவர்கள் முன்னிலையில், ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதிஷ் குமார் நேற்று பிஹார் முதல்வராக 10 ஆவது முறையாக பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் ஆரிஃப் முகமது கான் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

நிதிஷ் குமார் பதவியேற்ற உடனேயே, பா.ஜ.க. தலைவர்கள் சாம்ராட் சவுத்ரி மற்றும் விஜய் குமார் சின்ஹா ஆகியோர் அமைச்சரவை அமைச்சர்களாக பதவியேற்றனர்.

ஜே.டி.யு. தலைவர்கள் விஜய் குமார் சவுத்ரி, பிஜேந்திர பிரசாத் யாதவ், ஷ்ரவன் குமார், பா.ஜ.க. தலைவர்கள் மங்கள் பாண்டே, திலீப் குமார் ஜெய்ஸ்வால் மற்றும்நிதின்நபின்உள்ளிட்டபலரும்அமைச்சரவை அமைச்சர்களாக பதவியேற்றனர்.

முன்னதாக, நேற்று முன்தினம் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சட்டப்பேரவை குழு தலைவராக நிதிஷ் குமார் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னதாக, பாட்னாவில் உள்ள நிதிஷ்குமாரின் இல்லத்தில் நடைபெற்ற ஜே.டி.யு. சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டத்தில் அவர் ஜே.டி.யு. சட்டப்பேரவை கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பீகாரில் மொத்தம் 26 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர். இதில் பா.ஜ.கவிலிருந்து 14 பேர், ஜே.டி..யுவிலிருந்து 8 பேர், எல்.ஜே.பியிலிருந்து 2 பேர், எச்.ஏ.எம் மற்றும் ஆர்.எல்.எம்லிருந்து தலா ஒருவர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர். நிதிஷ் குமாரின் அமைச்சரவையில் உள்ள 26 பேரில் ஒரே ஒரு முஸ்லிம் மட்டும் இடம்பெற்றுள்ளார்.

மஹுவா சட்டமன்றத் தொகுதியில் லாலு பிரசாத்தின் மகன் தேஜ் பிரதாப் யாதவை தோற்கடித்த எல்.ஜே.பி யின் சஞ்சய் குமார் சிங் உட்பட 9 புதிய முகங்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். பீகார் அமைச்சரவையில் மூன்று பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கயா டவுனில் இருந்து 9 முறை பா.ஜ.க எம்.எல்.ஏ.வான பிரேம் குமார் சபாநாயகராக பொறுப்பேற்கிறார்.

# எஸ்.ஐ.ஆர் பணியை நிறுத்தக் கோரி தேர்தல் ஆணையருக்கு மம்தா கடிதம்



மேற்கு வங்கத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும்வாக்காளர்பட்டியல்சிறப்புதீவிர திருத்தப் பணிகளை உடனடியாக நிறுத்தக் கோரி, தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

"மேற்கு வங்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்) பணிகள் மீண்டும் மீண்டும் கவலைகளை ஏற்படுத்தி, அதுதற்போது ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளதால், இது குறித்து கடிதம் எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் எஸ்.ஐ.ஆர். திட்டமிடப்படாமலும் ஆபத்தான முறையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால், முதல் நாளில் இருந்தே அதன் செயல்முறை முடங்கியுள்ளது.

அடிப்படை தயார் நிலை, போதுமான திட்டமிடல், தெளிவான தகவல் தொடர்பு இல்லாமல், அதிகாரிகள் மீதும் பொதுமக்கள் மீதும் எஸ்ஐஆர் நடவடிக்கையை தேர்தல் ஆணையம் திணித்துள்ளது. அதிகாரிகளுக்கு போதுமான பயிற்சி அளிக்கப்படாதது, கட்டாய ஆவணங்கள் குறித்த குழப்பம், வேலை நேரத்தில் பி.எல்.ஓக்கள் வாக்காளர்களைச் சந்திப்பது ஆகியவை, இந்த நடவடிக்கை முழுவதையும் கட்டமைப்பு ரீதியாக பொருத்தமற்றதாக ஆக்கியுள்ளது.

எனவே, தற்போதைய நடைமுறையை நிறுத்துவது, கட்டாயப்படுத்துவதை நிறுத்துவது, சரியான பயிற்சி மற்றும் ஆதரவை வழங்குவது ஆகியவற்றை கருத்தில் கொண்டு தற்போதைய செயல்முறையை முழுமையாக மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். இதை தாமதமின்றி செய்யாவிட்டால், அரசு அமைப்பு, அதிகாரிகள் மற்றும் குடிமக்களுக்கு ஏற்படும் விளைவுகள் மீள முடியாததாக இருக்கும். பொறுப்புணர்வுடனும், மனிதநேயத்துடனும், தீர்க்கமான உணர்வுடனும் இந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பி.எல்.ஓக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பணிச் சுமை, மனித வரம்புகளுக்கு அப்பாற்பட்டது. அவர்கள் தங்கள் முக்கிய கடமைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறார்கள். அவர்களில் பலர் ஆசிரியர்களாகவும், முக்கிய அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். அதேநேரத்தில் அவர்கள்தான் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்புகளை நடத்துகிறார்கள், சிக்கலான மின் சமர்ப்பிப்புகளை கையாளுகிறார்கள். பயிற்சி இல்லாமை, சர்வர் செயலிழப்பு, தரவு பொருந்தாமை போன்ற காரணங்களால் ஆன்லைன் படிவங்களுடன் அவர்கள் போராடுகிறார்கள். இதன் விளைவு, நிர்வாக ஸ்தம்பிப்பை ஏற்படுத்தும்.

இந்த வேகத்தில் டிசம்பர் 4 ஆம் திகதிக்குள் பல தொகுதிகளில் வாக்காளர் தரவை துல்லியமாக பதிவேற்ற முடியாது என்பது கிட்டத்தட்ட உறுதி. அதிகப்படியான அழுத்தம் காரணமாகவும், தண்டனைக்குப் பயந்தும் பி.எல்.ஓ-க்கள் தவறான, முழுமையற்ற உள்ளீடுகளை தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், உண்மையான வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்படும் அபாயம் உள்ளது. அதோடு, வாக்காளர் பட்டியலின் தரத்தை சீர்குலைக்கும்.

மேற்கு வங்கத்தில் லட்சக்கணக்கான விவசாயிகள் நெல், உருளைக்கிழங்கு அறுவடைப் பணிகளில் உள்ளனர். அவர்கள், எஸ்.ஐ.ஆர். கணக்கெடுப்பில் பங்கேற்க தங்கள் விவசாயப் பணிகளை கைவிடுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. எஸ்.ஐ.ஆர். பணி அழுத்தம் காரணமாக அங்கன்வாடி ஊழியர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இந்தப் பணி தொடங்கியதில் இருந்து பலர் உயிரிழந்துள்ளனர். திட்டிடப்படாத, கட்டாயப்படுத்தும் இந்தப் பணி, உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கிறது. மேலும், தேர்தல் திருத்தத்தின் நியாயத்தன்மைக்கே ஆபத்தை விளைவிக்கிறது. எனவே, இந்த நடவடிக்கையை மேற்கு வங்கத்தில் உடனடியாக நிறுத்த வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.







# 1000 வீரர்களின் உடல்களினை ஒப்படைத்தன ரஷ்யா, உக்ரைன்

போரில் உயிரிழந்த வீரர்களின் உடல்களை உக்ரைன் மற்றும் ரஷ்யா பரிமாற்றம் செய்துள்ளன.

உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரண்டு போர் நாடுகளும் சமீபத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் உடல்களை பரிமாற்றம் செய்துள்ளன.

உக்ரைனிய அதிகாரிகள் மற்றும் ரஷ்ய அரசு ஊடகங்கள் இந்த தகவலை வியாழக்கிழமை உறுதிப்படுத்தியுள்ளன.

ரஷ்யாவின்தரப்பில்இருந்துகிட்டத்தட்ட 1000 வீரர்களின் உடல்கள் உக்ரைனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனால், அதே சமயம் உக்ரைன் தரப்பில் இருந்து வெறும் 30 வீரர்கள் உடல் மட்டுமே ரஷ்யாவிடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாக ரஷ்ய அரசு ஊடகம் பெயர் வெளியிடாத நபரை மேற்கோள் காட்டி தெரிவித்துள்ளது.

இந்நிலையில்உக்ரைனுக்குகொண்டு வரப்பட்டுள்ள 1000 இற்கும் மேற்பட்ட உடல்களை அடையாளம் காணும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த வீரர்கள் உடல் பரிமாற்றமானது இருநாடுகளுக்கு இடையிலான தொடர்ச்சியான போர் நிறுத்த பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு மத்தியில் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குழந்தைகள் உட்பட 25 பேர் உயிரிழப்பு





காசா மீது இஸ்ரேல் நடத்திய வான் வழித் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் கடந்த 5 வாரங்களாக அமுலில் உள்ள நிலையில் புதன் கிழமை காசாவின் மீது இஸ்ரேல் வான் வழித் தாக்குதலை நடத்தியது.

இஸ்ரேல் நடத்திய இந்த தாக்குதலில் குறைந்தது 25 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது.

காசாவின் கிழக்கு ஸைதூன் பகுதியில் உள்ள மத வழிபாட்டு தளத்தின் மீது இஸ்ரேல் நடத்திய இந்த தாக்குதலில் மீட்புக் குழுவினர் 10 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் வழங்கிய விளக்கத்தில், ஹமாஸின் பயங்கரவாத இலக்குகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது.

கான் யூனிஸ் பகுதியில் உள்ள இஸ்ரேலிய துருப்புகள் மீது ஹமாஸ் படையினர் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தி போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதால் இந்த பதிலடி தாக்குதல் நடத்தப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் கூற்றை மறுத்துள்ள ஹமாஸ், இந்த நடவடிக்கை போர் நிறுத்த ஒப்பந்தத்தை பலவீனப்படுத்தும் என்று எச்சரித்துள்ளது.





# அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தால் அமைக்கப்பட்ட மீள்குடியேற்றப்பட்ட மக்களின் இரு வீடுகள் உடைப்பு

## திருகோணமலை முத்துநகரில் குழப்பம் தொடர்கின்றது

**(எஸ்.கீதபொன்கலன்)**

சர்சைக்குரிய திருகோணமலை, முத்துநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள, மீள்குடியேற்ற வீடமைப்புத் திட்டத்திலிருந்த இரண்டு வீடுகள். சூரிய மின்சக்தி திட்டத்திற்கு வழங்கப்பட்ட காணிக்குள் உள்ளன எனக் காரணம் கூறி, மின்சக்தித்திட்ட நிறுவனத்தால் நேற்று முன்தினமும், நேற்றும் உடைத்து அகற்றப்பட்டுள்ளன.

மக்கள் குடியிருந்த இந்த வீடுகள் இலங்கைத்துறைமுக அதிகாரசபையினரின் முன்னிலையில், பொலிஸ் பாதுகாப்புடன் இடித்து அகற்றப்பட்டுள்ளன.

2006 ம் ஆண்டு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் 189 வீடுகளை அமைத்து மீள் குடியேறிவர்களுக்கு வழங்கி இருந்தது. அப்பொழுது அரசிடம் இருந்து இக்காணிகள் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் சட்ட ரீதியாக பெறப்பட்டிருந்தன. இந்நிலையில் இந்த வீடமைப்புத்திட்டத்திற்குள் தமக்கு வழங்கப்பட்டு காணியின் எல்லை உள்ளது, எனவே அதற்குட்பட்ட வீடுகளை நாங்கள் அகற்றுகின்றோம் என்று அதனை அகற்றிய தரப்பு கூறுவதாக பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் கூறினர்.

இதே வேளை இன்னும் பல வீடுகள் இடித்து அகற்றப்படவுள்ளன எனவும் இதனால் குடியிருப்பாளர்கள் மிகுந்த குழப்ப நிலையில் இருக்கின்றனர் எனவும் அறிய முடிகின்றது.



# நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் மண்சரிவு

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

நோட்டன் மஸ்கெலியா பிரதான வீதியில் மண் திட்டுகள் சரிந்து விழுந்ததில் போக்குவரத்து நடவடிக்கைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் பெய்து வரும் கன மழை காரணமாக நோட்டன் நகருக்கு அருகில் உள்ள நோட்டன் பிரிட்ஜ் மஸ்கெலியா பிரதான வீதியில் மரத்துடன் மண் திட்டு சரிந்து விழுந்தது.

இதன் காரணமாக நோட்டன் பிரிட்ஜ் – மஸ்கெலியா போக்குவரத்து நடவடிக்கைகள் துண்டிக்கபட்டு உள்ளன என



நோட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மேலும் மண் திட்டையும் சரிந்த மரத்தினை அகற்ற நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் மற்றும் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் நிலைய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.



# மீனவர்களைச் சதிக்க விரைவில் முல்லைத்தீவிற்கு வருவார் அநுர

## ரவிகரன் எம்.பியின் கோரிக்கையை ஏற்று அவரே உறுதிமொழி





**(விஜயரத்தினம் சரவணன்)**

வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கடற்றொழிலாளர்களைச் நேரில் சந்தித்து கலந்துரையாடுமாறும் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, விரைவில் முல்லைத்தீவிற்கு வருகைதந்து கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேரடியாகக் கேட்டறியவுள்ளார் எனப் பதிலளித்துள்ளார்

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிக்கும், ஜனாதிபதிக்குமிடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியுடனான சந்திப்பில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, மாகாண சபைத் தேர்தல், வடகிழக்கில் உள்ள காணிப் பிரச்சினைகள், துயிலுமில்லங்களை விடுவிப்புச்செய்தல், வட, கிழக்கில் அதிகரித்துள்ள படையினரின் பிரசன்னம், பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள்,அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய புத்தர் சிலை விவகாரம், வடக்கு, கிழக்கிலுள்ள கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் பேசியிருந்தோம்.

அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் இடம்பெறும் அதிகரித்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் மிக மோசமாக கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை இதன்போது சுட்டிக்காட்டியிருந்தேன்.

அதேவேளை வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்கள் கடற்றொழிலுடன் தொடர்புடைய மாவட்டங்களாகக் காணப்படுகின்ன. இந்நிலையில் அங்கு அதிகளவில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெறுகின்றமையையும் அதனால் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன்.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் நாடாளுமன்றிற்கு வருகைதந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து இந்தச் சட்டவிரோதக் கடற்றொழிலால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியைச் சந்திப்பது தொடர்பால் கோரிக்கை விடுத்த விடயத்தினையும் இதன்போது ஜனதிபதியிடம் தெரியப்படுத்தினேன்.

அத்தோடு சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள்தொடர்பாக ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம், சம்மேளனம், கடற்றொழிலாளர் சங்கங்கள் உள்ளிட்ட தரப்பினரால் கடிதங்கள் மூலம் என்னிடம் கோரிக்கை விடுக்கப்பட்டமையையும், அந்தக் கோரிக்கைக் கடிதங்களுடன் ஏற்கனவே என்னால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பிலும் நினைவுபடுத்தினேன்.

இவ்வாறாக வடக்குமாகாண கடற்றொழிலாளர்களர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க விரும்புகின்றனர் என்ற தகவலையும் தெரியப்படுத்தினேன்.

வடபகுதி மீனவர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக அவர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து அக்குறைகளைத் தீர்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டுமெனவும் வலியுறுத்தியிருந்தேன். எமது கட்சியினரும் இது தொடர்பில் பேசியிருந்தார்கள்.

இந்நிலையில் கூடியவிரையில் தாம் முல்லைத்தீவிற்கு வருகைதந்து அந்த மீனவர்களுடன் நேரடியாக பேசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என ஜனாதிபதி கூறியிருந்தார்.

இதுதவிர வன இலாகா, வனஜீவ ராசிகள் ஆகிய திணைக்களங்கள் கடந்த 2009ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு ஆக்கிரமித்த இடங்களைப. பற்றியும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் நூற்றுக்கும் மேற்பட்ட படையினரது முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் இதன்போது ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தேன் – என்றார்.



# சட்டவிரோதமாக இந்தியா சென்று வந்த இருவர் உட்பட மூவர் குருநகரில் கைது

## படகும் கைப்பற்றப்பட்டது

**(த.சுபேசன்)**

போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளுக்காக சட்டவிரோதமான முறையில் படகில் இந்தியா சென்று வந்த இருவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் வைத்து யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரும் படகில் இந்தியா சென்று வந்ததமைக்கான ஆதாரத்தை, ஜி.பி.எஸ். கருவியின் உதவியுடன் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்தியா சென்று கஞ்சாவுடன் யாழ் நோக்கி படகு வருவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைகப்பெற்ற போதிலும் மீட்கப்பட்ட படகில் போதைப் பொருள்கள் எவையும் மீட்கப்படவில்லை எனவும் –

கடலுக்குள் வைத்துப் போதைப் பொருள்கள் கைமாற்றப்பட்டிருக்கலாம் எனவும் –

பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அத்துடன், மேற்படி நபர்களுக்கு உதவிய குற்றச்சாட்டிற்காக குருநகர் கடற்கரைப் பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து இரண்டு மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டிருப்பதாகக் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட படகின் உரிமையாளர் ஏற்கனவே 300 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுச் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார் எனவும் –

அவருடைய மருமகனே இவ்வாறு இந்தியாவுக்குச் சட்டவிரோதமாகச் சென்று வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் –

பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் வழிகாட்டுதலின் கீழ் செயற்பட்ட யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி மஞ்சுள கருணாரத்ன மற்றும் களுபண்டார ஆகியோரின் தலைமையின் கீழான பொலிஸ் குழுவினரே இந்தக் கைது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைதான மூன்று சந்தேக நபர்களையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடப் பரீட்சையில் மோசடியில் ஈடுபட்ட மாணவிக்குத் தடை விதிப்பு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீடப் பரீட்சையின் போது மோசடியில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் மாணவி ஒருவருக்கு ஒரு வருடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட இறுதியாண்டு பரீட்சையில் தோற்றிய மாணவி தான் அணிந்திருந்த பர்தா ஆடையின் உள்ளே மறைத்து வைத்திருந்த கைத் தொலைபேசியின் ஊடாக மோசடி செய்த குற்றத்திற்காகவே அவருக்கு ஒரு வருடத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது.

தடை விதிக்கப்பட்ட ஒரு வருட காலத்தினுள் மாணவி பல்கலைக் கழகப் பரீட்சைகள் எவற்றிலும் தோற்ற முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாணவி தனது காலாசார உடையாக பரிதா அணிந்திருந்தபோது அதனைச் சாதகமாக பயன்படுத்தியே இந்த மோசடியில் ஈடுபட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.



# பொகவந்தலாவ செல்வகந்த வீதியில் நேற்று மண்மேடு சரிந்தமையால் போக்குவரத்துத் தடை

(பொகவந்தலாவ: எஸ்.சதீஸ்)

நேற்று மாலை பொகவந்தலாவ பகுதியில் பெய்த கடும் மழையின் காரணமாக பொகவந்தலாவ செல்வ கந்த பகுதியில் உள்ள பிரதான வீதிக்கு அருகாமையில் உள்ள பாரிய மண் மேடு ஒன்று சரிந்து விழுந்தது. இதனால் அந்த வீதியில் போக்குவரத்து சுமார் மூன்று மணித்தியாலங்கள் பாதிக்கப்பட்டன என பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித் தனர்.

இந்த சம்பவம் நேற்றய் வியாழக் கிழமை பிற்பகல் 1:30 மணியளவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வீதியில் உள்ள மண்மேட்டௌ அகற்றும் நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# இன்றைய ராசி பலன்கள் - 21.11.2025




நீங்கள் எடுத்த முயற்சியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பும் முன்னேற்றமும் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிகளுக்கு உரிய அங்கீகாரம் பெருவீர்கள்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் உண்மையான உறவினை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணவரவு திருப்தியை அளிக்கும். உங்கள் வங்கியிருப்பு வளர்வதைக் காண்பீர்கள்.

அமைதியான அணுகுமுறை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று திருப்தியற்ற குழப்பமான மனநிலையில் காணப்படுவீர்கள். அதனால் உரிய முயற்சிகள் எடுப்பது கடினமாக இருக்கும். தியானம் மேற்கொள்வது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிட்டால் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்கலாம்.

உங்கள் துணையிடம் சாதரணமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க இது அவசியம்.

இன்று பணப்பற்றாக்குறை கவலையை அளிக்கும். பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. ஆன்மீகம் தொடர்பான பயணங்கள் நல்லது. இது அமைதியையம் ஆறுதலையும் தரும்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும். கூடுதல் பொறுப்புகள் ஏற்க வேண்டியிருக்கும். உங்கள் பணிக்கு பாராட்டும் அங்கீகாரமும் கிடைப்பது கடினம்.

மன சஞ்சலங்களை எதிர் கொள்ள நேரும். இதனால் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிப்பது கடினமாக இருக்கும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும். உரிய நேரத்தில் உணவு உண்ண வேண்டும்.




இன்று சாதகமான நாளாக இருக்கும். உங்கள் நெருங்கிய நண்பர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள்.

உங்கள் பணிக்காக மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் திறமை பாராட்டைப் பெரும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் அவரின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று ஆரோக்கியமாய் இருப்பீர்கள்.




இன்று ஆற்றலும் தன்னம்பிக்கையும் குறைந்து காணப்படும். இந்த மன நிலை உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்களிடம் தனிமை உணர்வு காணப்படும். இன்று எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு எதிராக அமையும்.

உங்கள் பணிகளில் தாமதங்கள் ஏற்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையிடம் அற்ப விஷயங்களில் குறை காண்பீர்கள். நல்லுறவை ஏற்படுத்த சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலிக்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் பதட்டத்துடன் குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். உணர்ச்சி வசப்படாமல் அமைதியைப் பராமரித்தால் நற்பலன்களைக் காணலாம்.தெய்வீக இசை கேட்பது ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவை பராமரிக்க முடியாது.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மௌனம் கடைபிடிப்பது சிறந்தது.

நிதிநிலைமை இழுபறியாக இருக்கும். பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் நிதிநிலையை கண்காணிக்க வேண்டும்.




இன்றைய நாள் துடிப்பாக இருக்கும். உங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படும். எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் இன்று எடுக்கலாம்.

பணியிடத்தில் சமூகமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும்.இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் இனிமையான தொடர்பு காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர் கால பாதுகாப்பு கருதி மணம் சேமிக்கும் வாய்ப்பும் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும். ஆரோக்கியத்தை பராமரிக்கும் அளவிற்கு உங்களிடம் ஆற்றலும் உறுதியும் காணப்படும்.




இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பலனைப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடச்சூழல் சீராக இருக்கும். புத்திசாலித்தனத்துடன் நீங்கள் செய்யும் முயற்சிகளில் உங்கள் நன்மதிப்பு உயரும்.

உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்சிகள் காரணமாக உற்சாகமாக இருப்பீர்கள். இந்த நிகழ்சிகள் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். தேவைப்படும் அளவிற்கு பணம் காணப்படும். திருப்திகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.11.2025




இன்று சிறப்பான நாளாக இருக்கும். எதிர்ப்பாராத நன்மைகள் இன்று காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் அளிக்கும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியைப் பொறுத்த வரை இன்று சிறப்பான நாள்.

உங்களின் பாராட்டு வார்த்தைகள் உங்கள் துணையை திருப்தியடையச் செய்யும். நீங்கள் இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் பயன் பெறக் கூடிய அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. அதிக அளவில் பணத்தை சேமிப்பீர்கள்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. கவனமாக மற்றும் உறுதியுடன் உங்கள் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். தெய்வீகப் பாடல்கள் மற்றும் ஸ்லோகங்கள் சொல்வது நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் விவேகத்துடன் செயலாற்றினால் வெற்றி நிச்சயம். சக பணியாளர்களிடமிருந்து தொல்லைகள் ஏற்படலாம்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க முடியாது. நல்லுறவைப் பின் இத்தகைய உணர்வுகளை புறக்கணித்தல் வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும்.




இன்று நீங்கள் வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் உங்களை நீங்கள் அமைதியாக வைத்திருங்கள். இனிமையான இசையைக் கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் பதட்டமான சூழல் காணப்படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. திட்டமிட்டு ஒழுங்கான முறையில் பணியாற்றுவது சிறந்தது.

உங்களின் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இதனை தவிர்த்தல் நல்லது.

குடும்பத்திற்காக அதிகம் செலவழிக்க நேரும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக நிதிநிலைமையை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.




இன்று நல்ல பலன்கள் தரும் சிறப்பான நாள். விட்டுக்கொடுப்பதன் மூலம் நன்மை கிடைக்கும். இன்று நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.

இன்று பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். சக பணியாளர்களின் ஆதரவு திருப்தியை அளிக்கும். பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும்.

உங்கள் துணையிடத்தில் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கான கூடுதல் பணம் ஊக்கத் தொகையாக கிடைக்கும்.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உடல் ஆரோக்கியம் சேறாக இருக்கும்.

# நெடுங்கேணி பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது!

(கி.வசந்தன்)

வவுனியா நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் சார்ஜண்ட் தர உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை இலஞ்சம் பெற முற்பட்ட போது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டார். நேற்று அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்தப் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு முறைப்பாடு தொடர்பாக நபர் ஒருவரிடம் இலஞ்சம் கோருகின்றார் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.



இதனையடுத்து நெடுங்கேணி பகுதிக்கு வருகை தந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் அந்த பொலிஸ் உத்தியோகத்தர் இலஞ்சப் பணத்தின் ஒரு பகுதியை பெறமுற்பட்ட போது அவரைக் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் நேற்றைய தினம் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

# மன்னாரில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்களுக்கு மலேரியாப் பரிசோதனை செய்வதற்கு ஏற்பாடு

(ந.லோகதயாளன்)

மன்னாரில் நிற்கும் பாகிஸ்தானியர்களுக்கு மலேரியாப் பரிசோதனை மேற்கொள்ள மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் காற்றாலைத் திட்டப் பணிகளிற்காக பாகிஸ்தானில் இருந்து வருகை தந்து நிற்கும் 28 தொழிலாளர்களிடத்திலும் மலேரியாத் தொற்று உள்ளதா என்பதனை கண்டறியுமாறு மாவட்டச் செயலகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இலங்கையில் மலேரியா முற்றாக ஒழிக்கப்பட்டபோதும் வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் ஒரு சிலர் மூலம் அங்காங்கே மலேரியா இனம் காணப்படுகின்றது.

இதேநேரம் பாகிஸ்த்தன், இந்தியா போன்ற நாடுகளில் இன்னமும் மலேரியா காய்ச்சல் பரவல் காணப்படுவதனாலும், இலங்கையில் தற்போது நிலவும் பருவ மழையின் காரணமாக நுளம்பு பெருக்கம் ஏற்பட்டால் மலேரியா நோயாளி மூலம் அது மேலும் பரவாமல் தடுக்கும் வகையிலும் மன்னாரில் தங்கி நின்று பணியாற்றும் பாகிஸ்தானியர்களிடத்தில் மலேரியா பரிசோதனை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலகம் சுகாதார அதிகாரிக்கு அறிவுரை வழங்கியுள்ளது எனத் தெரிய வருகின்றது.